# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

**CC.No.78/2024 L.W.3 P.W.3**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.விருதாம்பாள் | Father / Husband Name | ராஜேந்திரன் |
| Village | ஆவினங்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 55 |
| | | Time | 12.30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 12.08.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் ஆவினங்குடியில் குடும்பத்துடன் வசித்து காட்டு வேலை செய்து வருகிறேன். எனக்கு அசா.1, அசா.2 ஐ தவிர மற்ற பட்டியல் சாட்சிகளை தெரியாது. எதிரி அழகுதுரையை தெரியும் (எதிரி ஆஜரில்லை). கடந்த 2014 என்றுசொல்லி பிறகு 2024 என்று சாட்சி மாதம் மே மாதம் ஆனால் தேதி ஞாபகமில்லை என்று கூறினார். இரவு 11.00 மணிக்குமேல் தூங்கிக்கொண்டிருந்தபோது கழுத்தில் இருந்தஜெயினை கழற்ற வந்தார் ஆனால் அது கவரிங் ஜெயின்தான் அந்த தம்பிதான் கழற்ற வந்தார் அந்த தம்பியின் பெயர் அழகுதுரை. நான்உடனே பயந்துகொண்டு நெஞ்சு படபட என ஆகிவிட்டது. கொஞ்ச நேரம் கழித்துவெளியே வரும்போது அசா்.1 விமலாவும்., அசா.2 பிரகாஷ்சும் மாரியம்மன் கோவில்அருகே வந்தார்கள் அவா்களிடம் உங்க வீட்டிற்கு யார் வந்தார்கள் என்று கேட்டேன் அவர்யார் என்று தெரியலம்மா என்று சொன்னேன். அவர்கள் கத்திக்கொண்டிருந்தார்கள் அவர்களிடம் எங்க வீட்டிற்கு அழகுதுரை வந்தார் என்,று சொன்னேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் விசாரித்தனர்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தேதி, தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1.கடந்த 24 ம் தேதி, மே மாதம், 24 ம் வருடம் என்று சொல்லியுள்ளேனா என்றால் ? தேதி

அப்படி இருக்கலாம் வருடம் ஞாபகமில்லை. மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியில் நான் தூங்கிகொண்டு இருக்கும்போது என் கழுத்தில் கை வைத்து ஜெயினை பிடித்து யாரோ இழுப்பதுபோல் தெரிந்தது என்றும் நான் கண் விழித்து பார்க்கும்போதுயோரோ ஒருவர் என் வாயை மூடினார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம். அது உண்மைதான்.

2. மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியில் நான் கழுத்தில் இருப்பது கவரிங் என்றுசொல்லி கத்தினேன் உடனே அவர் வீட்டின் வெளியே ஓடிவிட்டான் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம்.

3. நான் எழுந்து லைட்போட்டு பார்ப்பதற்குள்அவர் மாரியம்மன் கோவிலுக்கு அருகில் ஓடிவிட்டான்அப்போது மணி 12.00 ஆகும் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம்.

4. நான் தனியாக போவதற்கு பயந்துகொண்டு சற்றுநேரம் வீட்டிலேயே இருந்தேன் பிறகு வெளியே வந்து பார்க்கும்போது எனக்கு எதிரே விமலாவும் அவருடைய வீட்டுக்காரர் பிரகாஷ் மற்றும் அருகில் இருந்தவர்களும் வந்தார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம்.

5. அப்போது நான் அவர்களை பார்த்து இந்த நேரத்தில் இந்த பக்கம் என்ன என்று கேட்டேன் அதற்கு அவர்கள் அழகுதுரை என்பவர் வீட்டிற்குள் புகுந்து போனை எடுத்துக்கொண்டு விமலா கழுத்தில்இருந்த ஜெயினை பறிக்க வந்தான் என்று சொன்னார்கள் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? சொன்னேன்.

6. நானும் எனது வீட்டிலும் இப்போதுதான் நுழைந்தான் என்றும் நான்வெளியே வருவதற்குள் ஓடிவிட்டான் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? சொன்னேன்.

7. பிறகு நாங்கள் அனைவரும் மேற்படி அழகுதுரையை தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? சொன்னேன் பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

8. பிறகு விமலா வீட்டிற்கு சென்று பார்த்தபோது அவருடைய மகளுடைய செல்போன் காணவிலை என்றும்மேற்படி செல்போனை அழகுதுரைதான் திருடியிருப்பார் என்றும் மேற்படி அழகுதுரையை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமாறு ஆவினங்குடி காவல் நிலையத்தில் புகார்மனுகொடுத்தார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? இல்லை, நான் விமலா வீட்டிற்கு போகவில்லை ஆனால் அவர் புகார்கொடுத்திருக்கலாம்.

9. ஆனால் போலிஸார் அங்கு வந்ததாகவும் மேற்படி எங்கள்வீட்டிற்கு எதிரி வந்ததாகவும் ஆனால் எங்கள் வீட்டில் இருந்த எந்தவிதமான பொருட்களும் திருடுபோகவில்லை என்பதால்தான் காவல் நிலையத்தில் புகார்மனு அளிக்கவில்லை என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம். மேலும் விமலா அவரது வீட்டில் செல்போன் காணவில்லை

என்பதால் காவல் நிலையத்திற்கு வந்து புகார்மனுகொடுத்தார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம்.

10. மேற்ச்சொன்ன 8 வது சங்கதியை கேட்டபோது போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளதை தற்போது இல்லை என்று சொல்வதற்கு காரணம் பதற்றம்தான் என்று சொன்னால் ? ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 ன் வீட்டின் அருகில் எனது வீடு இல்லை என்றால் ? சரிதான். போலிஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் ? விசாரித்தனர் எப்போது, எங்கு, எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் ? என்னை என் வீட்டில் வைத்து விசாரித்தனர், நேரம் காலை 7.00 லிருந்து 8.00 மணியிருக்கும், 2024 ம் வருடம், மே மாதம், தேதி ஞாபகமில்லை. அப்போது பதற்றமாக இருந்தது. போலிஸார் விசாரணையில் யாரோ ஒருவர் என்கழுத்தில் கையை வைத்து ஜெயினைபறித்தார் என்று தான் சொல்லியுள்ளேன். யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரிதான். அசா.1 விமலா சொல்லித்தான் அழகுதுரை என்று தெரியும் என்றால் ? சரிதான். நான்சொல்வதுபோன்று என் வீட்டில் யாரும் நுழையவில்லை என்றாலும், என்னுடைய ஜெயினை யாரும் பறிக்க வில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு சம்பவம் நடந்திருந்ததால் நான் காவல்நிலையம்சென்று புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. அசா.1 விமலா அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

**TYPED TO MYDICTATION OPENCOURT**

**INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI